வேணும்!... ஆனா... நெகிழிக்கு யாரும் விளக்கம் கேட்டா?

வி.2 : ஐ.ஆர். 8க்கு என்ன வெளக்கம்? வெளக்கம் தெரிஞ்சாச் சாப்பிட்டுப் பேண்டோம்? 24 மணிநேர தாம்பத்ய ஒறவுக்கு இதைவிட்டா வேற மருந்தே இல்லேபோம்!

வி.1 : உணவே மருந்து. மருந்தே உணவு... நெகிழிதான் உணவு... நெகிழிதான் மருந்து!

வி.2 : அதுக்கான வியாபார முத்திரை ஒண்ணு உருவாக்குவோம்...

வி.1 : ஆட்டிஆக்குள்ள அம்பு போறதுதான் நெகிழி அரிசிக்கு டிரேட் மார்க்!

வி.2 : அதுவுஞ்... சரிதான்... நெகிழி... நெகிழி.. நெகிழி.. நெகிழி... தில்லானா...நெகிழி அரிசி சமச்சித் தின்னா 'தில்'தானா!...

வி.1 : பாட்டு சூப்பர்... விளம்பரம்... விளம்பரம்.... விளம்பரம் செய்ய வரிசையில் இப்போ, ஆணும் பொண்ணுமா சினிமாக்காரங்க நூறு பேரு! மட்டையை உயர்த்திக் குதியாட்டம் போட கிரிக்கெட் வீரங்க எரநூறு பேரு!.....

வி.2 : 'நெகிழி.... எனர்ஜி ஃபார் புணர்ச்சி'

வி.1 : நெகிழி அரிசி.... இதுலெ கல் இல்லெ... இதுக்குப் பில்லும் இல்லெ... செய்கூலி சேதாரம் எதுவும் இல்லெ... இதுக்கான ஆதாரம் எதுவும் எங்க கிட்டயும் இல்லெ... ஆகவே எல்லாரும் நெகிழி அரிசியைப் பயன்படுத்தணும்....

வி.2 : ... நெகிழி... நெகிழி... நெகிழி... நெகிழி... தில்லானா...

வி.1 : நெகிழி அரிசி சமச்சித் தின்னா 'தில்' தானா!

வி.1-வி.2 : நெகிழி... நெகிழி... நெகிழி... நெகிழி... தில்லானா...நெகிழி அரிசி சமச்சித் தின்னா 'தில்'தானா... நெகிழி.... நெகிழி... நெகிழி... நெகிழி...



பல்லானா... நெகிழி அரிசி சமச்சித் தின்னா பா..லா...னா! பலானா...

வி.2 : (மணியடித்தல்) எல்லாரும் புத்தகத்தை மூடி வையுங்க... வைட்டமின் A எதுல நெறைய இருக்கு?...... டக்ளஸ் நீ சொல்லு.....

வி.1 : நெகிழி அரிசியிலெ!....வைட்டமின் B எதுல

வி.2 : நெகிழி அரிசியிலெ!....வைட்டமின் C எதுல நெறைய இருக்கு?......கிங்பிஷர் நீ சொல்லு.....

வி.1 : நெகிழி அரிசியிலெ!... வைட்டமின் D எதுல நெறைய இருக்கு?.... வகுப்பு முழுக்கச் சேந்து சொல்லுங்க...

வி.2 : நெகிழி அரிசியிலெ!....

வி.1 : விளம்பரம்... விளம்பரம்... கல்யாண வீடு... எழவு வீடு... கச்சேரின்னு.... எல்லா எடத்லயும் நெகிழிப் பாட்டைப் போட்டுப் பட்டையைக் கௌப்பணும்..

வி.2 : வாராயோ நெகிழி வாராயோ...மண விருந்து காண வாராயோ...

வி.1 : அருமை... அருமை... இதுபோதும்!...

வி.2 : அடுத்து எழவு வீட்டுப் பாட்டு....

வி.1 : வ்டுவரை மதினி... வீதிவரை பதினி... காடுவரை பிகினி...கடைசிவரை நெகிழி...

வி.2 : மிக அருமை.. மிக அருமை...போதும்! போதும்!

வி.1 : அடுத்துக் கச்சேரிப் பாட்டு...

வி.2 : ஒண்...டு..திரீ...ஃபோர்...நெகிழி...

வி.1 : உகூ...

வி.2 : நெகிழி...

வி.1 : ஓகோ...

வி.2 : நெகிழிதான் எனக்குப் புடிச்ச ரைஸு... என் நெஞ்சு ரெண்டும் சும்மாச் சும்மா அடிக்குதடா கைஸு...

நெகிழினக்கா... நெகிழினக்கா... நெகிழினக்கா... நெகிழி... நெகிழினக்கா... நெகிழினக்கா.... நெகிழினக்கா... நெகிழி....

வி.2 : ... 'A' ஃபார்... அமெரிக்கா!

வி.1 : ... 'B' ஃபார்.... பிஸினஸ்!

வி.2 : .... 'C' ஃபார்.... கம்ப்யூட்டர்!

வி.1 : .... 'D' ஃபார்.... டயபடிக்ஸ்!

வி.2 : ... 'E' ஃபார்... இங்கிலீஷ்!

வி.1 : ... 'N' ஃபார்...நெகிழி!

வி.2 : ... 'N' ஃபார்...நெகிழி!

வி.2 : டயட்டீசியன் சொல்லுறத நல்லாக் கேளுங்க....

வி.1 : சுகர் ஃப்ரி - 0% சர்க்கரை......கொலஸ்ட்ரால் ஃப்ரி- 0% கொழுப்பு...

வி.2 : சர்க்கரை நோயர்களின் வரப்பிரசாதம் நெகிழி அரிசி.....

வி.1 : சர்க்கரை நோயி போயே போயி...

வி.2 : நெகிழி அரிசி சாப்பிட்டா...

வி.1 : சர்க்கரைக்கு டாட்டா!........

வி.2 : இன்னைக்கிக் கண்டுபிடிப்பு இப்படித்தான் சொல்லு தின்னு டாக்டர்கள வச்சி அடிக்கடி சொன்னதை மாத்திக்கிட்டே இருக்கணும்...

வி.1 : ஊடகங்கள் அதை வழிமொழிஞ்சுகிட்டே இருக்கணும்...

வி.2 : மக்களும் இதுக்குப் பழக்கப்பட்டுப் போய்க்கிட்டே இருக்கணும்...

வி.1 : எல்லாத்துக்கும் மாத்தத்தை ஏத்துக்கிற மனசுதான் வேணும்!



வி.1 : ஆஹா... நெட்வொர்க் சூப்பர்!... அய்யோ... அய்யோ... ஒடம்பெல்லாம் புல்லரிக்குது... அண்ணே! நெகிழிக் கதைக்கு வாங்கண்ணே!

வி.2 : நெகிழி... நெகிழி... நெகிழி... நெகிழி... தில்லானா... நெகிழி அரிசி சமச்சித் தின்னா 'தில்' தானா!

வி.1 : அண்ணே! அண்ணே! நெகிழின்னா என்னண்ணே?

வி.2 : 'நெகிழி'ன்னா... அது...அது....பிளாஸ்டிக்!

வி.1 : பிளாஸ்டிக்கா?...... அப்ப நெகிழி அரிசின்னா...

வி.2 : பிளாஸ்டிக் அரிசி...

வி.1 : பிளாஸ்டிக் அரிசியா?... ஹாஹாஹா....அதை எப்படிச் சாப்பிடுறது?

வி.2 : வாயாலதான்... புண்ணாக்குப் பருத்திக் கொட்ட சாப்பிட்ட மாடு. இப்ப பிளாஸ்டிக்கைச் சாப்பிடலெ... பாலைக் கறக்கலெ... அதை நாம வாங்கிக் குடிக்கலை

வி.1 : பிளாஸ்டிக் சாப்பிட்டா... வயித்துலக் கட்டிகிட்டி வந்துறாதா?

வி.2 : கொதிக்க வச்சிச் சாப்பிட்டா எதுவும் வராது போம்...எல்லாமே பழக்கமாயிர்றதுதான்!... பயந்தாதான் கட்டி... பழகிப்போனா அதுதான் வாழ்க்கை!

வி.1 : ஆமா ஆமா... பழகிப் போனா அதுதான் வாழ்க்கை!.... மாத்தத்தை ஏத்துக்க மொதல்ல மனசுதான் வேணும்...

வி.2 : அதுசரி... மனசுதான் வேணும்...

வி.1 : பிளாஸ்டிக் சூப்பர்தான்... ஆனா மனச உறுத்துற ஒண்ணு... பிளாஸ்டிக்னால நிலத்துக்கு அழிவுங்கிறாங்களே....

வி.2 : அப்ப அதைச் சமச்சிச் சாப்பிட்டு, அதை மனுஷக் கழிவா மாத்தச் சொல்லுவோம்... நிலத்தை வளமாக்கச் சொல்லுவோம்....

**வி.1** : அரசு அதுக்கு அனுமதிக்குமா?

**வி.2** : உள்ளங்கை அரிப்புக்கு மருந்து போட்டா, அரசே 'சத்துணவு' இதுதான்னு அதுக்கொரு விளக்கம் சொல்லி, அதுவே அதை விநியோகம் செய்யும்! பசுமைப் புரட்சி...

**வி.1** : வெண்மைப் புரட்சி...

**வி.2** : அதுமாதிரி.. இது நெகிமைப் புரட்சி.. எப்படியிருக்குது?

**வி.1-வி.2** : சூப்பர்... ஆஹா...நெகிழி நெகிழி நெகிழி நெகிழி தில்லானா... நெகிழி அரிசி சமச்சித் தின்னா 'தில்' தானா?

**வி.2** : ஒருபடி நெகிழி ஒரு தம்பிடி...

**வி.1** : தம்பிடி இப்பச் செல்லாக்காசு!

**வி.2** : அப்பச் செல்லாக் காசுக்கு ஒருபடி நெகிழி! இது எப்படி இருக்கு?

**வி.1** : சூப்பர் அண்ணே!... இலவசமா எல்லாத்தையும் அள்ளி அள்ளிக் கொடுப்போம்... ஒரு போகம் ரெண்டு போகமாச்சு... ரெண்டு மூணாச்சி... மூணு நாலாச்சி... அதுக்குப் பெறகு,கெமிக்கல் உரங்களைப் போட்டு, நெலத்தெ மலடாக்கி,19 நாள்லயே குறுகிய காலத்துல வெளைய வச்ச பசுமைப் புரட்சி, நாம கண்டுபுடிச்சதுதான!

**வி.2** : இப்ப, நிலம் மலடாகாம இருக்க, நிலத்லயே பயிரு பச்சை வைக்காம, மழையையே எதிர்பாக்காம, உரம் எதுவும் போடாம... ஒருமணி நேரக் கரெண்டெ வச்சே மிஷின்லயே உருவாக்கலாம் நெகிழி அரிசி!

**வி.1** : உழவு வேண்டாம்.... வெதப்பு வேண்டாம்... அறுப்பு வேண்டாம்...

**வி.2** : பசுமைப் புரட்சி... வெண்மைப் புரட்சி...

**வி.1** : அதுகளைப் போல இதுவொரு நெகிமைப் புரட்சி!...



**வி1.-வி.2** : நெகிழி நெகிழி நெகிழி நெகிழி தில்லானா... நெகிழி அரிசி சமச்சித் தின்னா 'தில்'தானா?

**வி.1** : நெகிழி... நெகிமை... நெகிழ்வு... அதனால் உருவாகும் மகிழ்வு!

**வி.2** : நெகிழ்வான மகிழ்வா... புழுங்கரிசி...பச்சரிசி ரெண்டுங் குடுப்போம்!

**வி.1** : பச்சரிசின்னா?.....அது எப்படி?

**வி.2** : பச்சைக் கலர்லயே குடுப்போம்...

**வி.1** : பச்சரிசின்னாலும் அது வெள்ளையாத்தானே இருக்கும்... பச்சையா இருந்தா சிரிக்க மாட்டாங்களா?

**வி.2** : சிகப்பரிசி பார்த்ததில்ல... அதைப் பாத்து யாரு சிரிச்சது?

**வி.1** : சிகப்பரிசின்னா... அதென்ன கம்யூனிஸ்ட்காரங்க அரிசியா...

**வி.2** : ஆமா... காம்ரேடுங்க அரிசி... அதுதான் கைக்குத்தல் அரிசி... அதுமாதிரி இது பச்ச அரிசி...பச்சை பச்சையாப் பேச்சு வரும்போம்... 'பலான' வயாக்கரா மருந்து இதுதாம்போம்...

**வி.1** : அதுவுஞ் சரிதான்.....ஆனா.....மக்கள்ட்ட வாங்கும் சக்தி கொறஞ்சி போனா?

**வி.2** : வாங்கும் சக்தியை வளப்படுத்த வங்கிகள் ஆரம்பிப் போம்!

**வி.1** : வங்கியா? ...அதுக்குப் பணம்?

**வி.2** : மக்கள்ட்ட இருந்தே முதலீடுகள் வாங்குவோம். 'எம் பணம் பணம் ஓம் பணம் பணம்.... ஓம் பண மெல்லாம் எம் பணம்!

**வி.1** : நம்ம பணம் பணம் அரசுப் பணம் பணம்! அரசுப் பணமெல்லாம் நம்ம பணம்!

**வி.2** : எங்கள் வங்கி இது உங்கள் வங்கி!

வி.1 : உங்கள் வங்கி இது எங்கள் வங்கி!

வி.2 : வட்டிங்கிற குட்டியை அது சொமக்கும்னு சொன்னா அவனுக்குப் புள்ளத்தாச்சி சொகம் கெடைக்கும்!

வி.1 : தேவைன்னா வட்டி விகிதத்தை அதிகப்படுத்தித் தூண்டில் போடுவோம்!

வி.2 : ஈமு கோழி ஒண்ணையும் இலவசமாய்க் கொடுப்போம்!

வி.1 : அதுக்கு ஆஸ்திரேலியாவில இருந்து ஈமு கோழிகளை இறக்குமதி வேற செய்யணுமா?

வி.2 : நம்ம ஊர்லயே தெருநாய்ங்க ரேஞ்சுக்கு தீவனத்துக்கு அதுங்களும் அலைஞ்சுகிட்டுதானிருக்கு.

வி.1 : அப்ப...அதுக்கும் சேர்த்து நெகிழித் தீவனங்களை நாமளே நெறைய உற்பத்தி பண்ணி அவுங்க கிட்டையே விப்பொம்.....ஈமு கோழி இலவசம்னா அவுங்க கனவு முழுக்க அது மேலயேதான் இருக்கும். நம்மளப் பத்தி யாரும் கவலைப்பட மாட்டாங்க...

வி.2 : நெகிழி ஆராய்ச்சிக்குப் பண உதவி...

வி.1 : 'நம்மோடது'...

வி.2 : நெகிழித் தயாரிப்புச் செலவும்...

வி.1 : 'நம்மோடது'...

வி.2 : நெகிழியைப் பரிந்துரைக்கிற டாக்டரு...

வி.1 : 'நம்மவரு'...நெகிழி விக்குற கடையும்...

வி.2 : 'நம்மோடது'... வயசுக்கு ஏத்தமாதிரி புதுப் புதுக் கலர்லெ நெகிழி அரிசியைக் கண்டுபுடிப்போம்...

வி.1 : வயசுக்கு ஏத்தாப்லெ புதுசு புதுசா நோய்களை உருவாக்குவோம்...

வி.2 : அப்புறம்...

வி.1 : பரிசோதனைக் கூடங்கள்....

வி.2 : 'நம்மோடது'...



வி.1 : இதுகளை விளம்பரம் செய்யிற இதழ்களும் டி.வி.க்களும்

வி.2 : 'நம்மளோடதேதான்'!

வி.1 : கல்லூரி...

வி.2 : 'நம்மோடது'...

வி.1 : கற்றுக் கொடுக்குறது...

வி.2 : 'நம்ம ஆளுங்க'.

வி.1 : கடன் கொடுக்குற வங்கியும்...

வி.2 : 'நம்மகிட்டதான்'!

வி.1 : அரசே...

வி.2 : 'நாமதான்'!

வி.1 : எல்லாமே 'நாமதான்'... நெட் ஒர்க் சூப்பர்..... எல்லா எடமும் நீக்கமற நிறைஞ்சிருக்கிற கடவுள் மாதிரி....

வி.2 : இதுதான் உண்மையான புனைவு!

வி.1 : இதுதான் புனைவான உண்மை!...

வி.2 : உண்மையும் புனைவும் சேர்ந்து அப்படியே கை பிடிச்சித் தொடர்ந்துபோனா...

இசை : நாசமாப் போகும்!

வி.1 : வெளம்பரம்... வெளம்பரம்...

வி.2 : நெகிழி... நெகிழி... நெகிழி... வயித்துக்கு நல்லது நெகிழி... வைரமாய்ச் சிரிக்கும் நெகிழி...

வி.1 : பாலைப்போல வெண்மை... பனியைப்போல குளுமை...

வி.2 : பத்தியம் இல்லை நெகிழி... வைத்தியம் இல்லை நெகிழி... எல்லோரும் விரும்பும் நெகிழி... நெகிழி... நெகிழி... நெகிழி...

வி.1-வி.2 : வயித்துக்கும் மயித்துக்கும் நெகிழி...நெகிழி

வி.1 : நம்பிக்கைதான் சாமி... நுகர்வோர்ட்ட மொதல்ல நம்பிக்கையை உருவாக்கணும்...

வி.2 : அட்சயத் திரிதை மாதிரி நெகிழிக்கும் ஒரு கதையை உருவாக்குவோம்...

வி.1 : நுகர்வோர் மனசைத் திருப்தி செய்யணும்.

வி.2 : ஆயுள் முழுக்க அதுக்கான தேவை இருந்துகிட்டே இருக்கணும்... இருக்க வச்சிகிட்டே இருக்கணும்..

வி.1 : அதுதான் வியாபாரம்...

வி.2 : நெகிழி... நெகிழி... நெகிழி... வியாபாரம் அது வியாபாரம்... விலைக்குப் படிஞ்சா வியாபாரம்... நெகிழி...நெகிழி...நெகிழி

வி.1 : பணத்தைப் போட்டுப் பணத்தை எடுக்கும் பாலிடிக்ஸ்தான் வியாபாரம்.... நெகிழி... நெகிழி... நெகிழி... நெகிழி... நெகிழி... நெகிழி...

வி.2 : மைனா என்பதும் வியாபாரம்... சைனா என்பதும் வியாபாரம்...

வி.1 : நைனா என்பதும் வியாபாரம்... ஐநா என்பதும் வியாபாரம்...

வி.2 : கல்வி என்பதும் வியாபாரம்... செல்வி என்பதும் வியாபாரம்...

வி.1 : வங்கி என்பதும் வியாபாரம்... அங்கி என்பதும் வியாபாரம்...

வி.1 : வியாபாரமயம்... தாராளமயம்.. உலகமயம்..

வி.2 : எல்லாமே ஒண்ணுக்கொண்ணு...

வி.1 : ஒண்ணிலிருந்து ஒண்ணு...

வி.2 : ஒண்ணுக்குள்ள ஒண்ணு...

வி.1 : ஆனா... எல்லாத்துக்கும் அடிப்படை....

வி.2 : எல்லாத்தையும் சந்தைப் பொருளா மாத்துறதுதான்...



வி.1-வி.2 : சந்தை... சந்தை... சந்தை...

வி.1 : நீயும் சந்தை... நானும் சந்தை... நெனச்சிப் பாத்தா எல்லாம் சந்தை...

வி.1 : சந்தை... மொந்தை... சந்தோஷம்... நீயும் சந்தை... நானும் சந்தை... நெனச்சிப் பாத்தா எல்லாம் சந்தை..

வி.1 : பொறப்பும் சந்தை...எறப்பும் சந்தை.... ஒறவும் சந்தை... பிரிவும் சந்தை...

வி.2 : உயிரும் சந்தை... மயிரும் சந்தை... கலையும் சந்தை... கொலையும் சந்தை...

வி.1-வி.2 : சந்தையாயணம்... வியாபாரமாயணம்...

வி.1 : நீயும் பொருள் நானும் பொருள்
நெனச்சுப் பாத்தா எல்லாம் பொருள்!

வி.2 : நீயும் காசு நானும் காசு
நெனச்சிப் பாத்தா எல்லாம் காசு!

வி.1-வி.2 : சந்தையாயணம்... வியாபாரமாயணம்...

வி.2 : அறிவும் சந்தை புனைவும் சந்தை... புணர்ச்சி சந்தை... கவர்ச்சி சந்தை...

வி.1 : சந்தை சந்தை நெகிழிச் சந்தை... நெனச்சிப் பாத்தா... ஒலகம் சந்தை...

வி1-வி.2 : சந்தையாயணம்... வியாபாரமாயணம்!

சரக்குமாயணம் அது சுருக்குமாயணம்!

உலகமாயணம் அது கலகமாயணம்!

சந்தையாயணம்... வியாபாரமாயணம்!

மந்தையாயணம்! அது மயானமாயணம்!

வியாபாரமாயணம்... அது வியாபாரமாயணம்

## வலி அறுப்பு

*(திறந்தவெளி, மூங்கில், பனைமரக் கட்டை, பனை ஓலை, வைக்கப்பிரி, வைக்கோல், உடைந்த பானை ஆகியவற்றைக் கொண்டே அரங்க வடிவமைப்பு செய்யப்பட்டிருக்கின்றது. இருள் சூழ்ந்த அரங்கில் அங்கங்கு நெருப்புப் பந்தங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன. அமைதியைக் கிழித்தபடி உறுமி ஓசை மெதுவே எழுகின்றது. அதைத் தொடர்ந்து கோடங்கி ஓசை... அதைத் தொடர்ந்து, கழுத்தை அறுக்கும் தொனியில் ஓங்காரக் குரலில் பாடல் ஒன்று ஒலிக்கிறது.)*

ஆலம் விழுதுக்குள்ளே அணுகுண்ட வச்ச கண்ணா! நீ
பாலம் கட்டிவச்சி அதைப் பதுங்குகுழி ஆக்கிட்டியே!
காலம் அரவானின் கழுத்தை அறுத்தெறிய, உயிர்
ஓலமிடும் அரவானி! உன் ஓங்காரம் தீர்வதெப்போ?

*(அரவானின் கழுத்து வெட்டப்படுகிறது. சோகத்துடனும் ஆங்காரத்துடனுமான குலவை ஒலி மேலெழும்ப, பறைகள் அதிர, ஒப்பாரிக் குரல்கள் அரங்கின் நாலாபுறமிருந்தும் எழுகின்றன. ஏணிகளின் மேல் நின்று கொண்டும் அமர்ந்து கொண்டும் மார்பில் அடித்துக் கொண்டும் அரவானியர் அரங்கிற்குள் வருகின்றனர். கழுத்தறுபட்ட அரவானின் உருவத்தின் கீழ் விழுந்து ஒப்பாரி வைக்கின்றனர்.)*

அம்மாடி.... அம்மையடி....
கொள்ளையின்னா கொள்ளையிது...
யாரு வீட்டுக் கொள்ளையிது...
அர்ச்சுனன் வீட்டுக் கொள்ளையிது...



*(ஒப்பாரி உச்சநிலையடைந்து அடங்குகிறது. பாட்டுக்காரன் பாடத் தொடங்குகிறான்.)*

வானம் குடைபிடிக்க.... வானம் குடைபிடிக்க...
வயலெல்லாம் பொலி சேர... வயலெல்லாம் பொலி சேர...
ஏனம் பழுதாச்சே... ஏனம் பழுதாச்சே...
ஊனமிதை என்ன சொல்ல?.... ஊனமிதை என்ன சொல்ல?...

*(ஒப்பாரி உச்சநிலையடைந்து அடங்குகிறது. பாட்டுக்காரன் பாடத் தொடங்குகிறான்.)*

வானம் வளர்பிறையாய்...
வறுமை எல்லாம் தேய்பிறையாய் - எங்க
வாழ்வு மட்டும் பெருங்குறையாய்...
வடிச்சு வச்ச முறையுமென்ன?

*(அழும் அரவானியர் பெருங்குரலெடுத்து ஒப்பாரி வைக்கின்றனர். சேலை முந்தானைகளைக் குடைகளாய்ப் பிடித்தபடி அழுகின்றனர். ஒப்பாரி ஒலி மங்க, பறை இசை எழுகின்றது. அழுதபடியே எழுந்து அவரவர் பகுதிக்குச் செல்கின்றனர். அதைத் தொடர்ந்து, உறுமி இசைக்கேற்ப, காலில் சலங்கை கட்டி, சவுக்கை வீசியபடி பாட்டுக்காரன் ஒருவன் ஆடியபடியே அரங்கின்முன் வருகிறான்.)*

தாலிகட்டிய அன்றைக்கே தாலியை அறுக்கும் சோகத்தைக் கூறுகட்டி ஓவியமாய் உறைந்திருக்கும் இவர்கள் யார்?.....

நாங்கள் யார்?

தாகத்தை நெருப்பூற்றியே தணிக்கும் அம்ருதப் பட்சிகளா இவர்கள்?.... யார் இவர்கள்?....

நாங்கள் யார்?

கருவறைக்கு விதியின்றித் திருவறையை அறுப்பதற்கே பிறப்பெடுத்த இவர்கள் யார்?....

நாங்கள் யார்?

யார் இவர்கள்?

*('நாங்கள் யார்' என்ற குரலினூடே அரவானியர் ஒவ்வொருவராய்க் காற்றில் மிதந்தபடி ஏணியை எடுக்கின்றனர்.)*

கருவறையின் தோற்றமயக்கம்!

திருவறையின் திணைமயக்கம்!

உருவடிவில் பால்மயக்கம்!

ஒன்றும் புரியவில்லையே!

எளிமையாய்ச் சொல்வதெனில் 'மாறிய பாலினம்'.

மாறிய பாலினமா?

பெண்பால் ஈற்றைப் பற்றிக் கொண்ட 'ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி' நாங்கள்!

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர் சொன்னது!

உங்கள் வரலாற்றுடன் ஒட்டிப் பிறந்ததே எங்கள் வரலாறும்!

'கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்த'லில் தடுமாறிப் போய் நாலாங்கட்டில் தங்கிப் போனவர்கள் நாங்கள்!

அவ்வைப் பாட்டி அழகு தமிழில் சொன்னது!

பேடு என்பது ஊனம்; உடல்குறை மட்டுமே!

பெண்ணாகி ஆணாய் அலியாய் நின்றவனாய் முக்கண்ணனை விளிக்கும் மூன்றாவது பாலினம் நாங்கள்!

மாதொருபாகனை- தாயுமானவனை - அம்மையப்பனைச் சிக்கெனப் பிடித்த மணிவாசகர் சொன்னது!

கடவுளாய் நாங்களும் கணக்கில் இருக்கிறோம்!

*(ஏணியைக் கொண்டு பல வடிவங்கள் உரையாடல்களின் ஊடே உருவாக்கப்படுகின்றன. புல்லாங்குழல் சோகத்தில் துடிக்கிறது. உரையாடல்களின் ஊடே அரவானியர் நகர்ந்து சென்று அவரவர்களுக்கான சட்டகத்தில் உறைகின்றனர்.)*



உங்கள் வரலாற்றுடன் ஒட்டிப் பிறந்ததே எங்கள் வரலாறும்!

பேடு என்பது ஊனம்; உடல்குறை மட்டுமே!

கடவுளாய் நாங்களும் கணக்கில் இருக்கிறோம்!

*(திரும்பத் திரும்ப வெவ்வேறு திசைகளிலிருந்து இந்த முழக்கங்கள் எழுப்பப்படுகின்றன. முழக்கங்களின் இறுதியில் அவர்களுக்குள் ஒரு கேள்வியை முன்வைக்கின்றனர்.)*

மனதிற்கேற்ப உடலைச் செதுக்கினால் அது பாவமா?

*(பார்வையாளர்களின் ஊடே நகர்ந்து சென்று மனதிற்கேற்ப உடலைச் செதுக்கினால் அது பாவமா? என்கிற கேள்வியை எழுப்புகின்றனர்... லாவணி மெட்டில் தாளம் மாறுகிறது. அரங்கின் முன் தளத்தின் இருபக்கத்திலிருந்தும் பாடல்கள் வருகின்றன... அதைக் கேட்க அரவானியர் முன்புறம் வந்து அமர்கின்றனர்; தாளமிடுகின்றனர். லாவணி பாடிவரும் பாடகர்கள் இருவரும் தாளமிட்டபடியே அரங்கின் மையத்திலிருப்பவரிடம் வருகின்றனர். பெண்ணாகி ஆணாய் அலியாய்... பாடல் பின்னணியில் இசையுடன் கேட்கிறது... இசை குறைய, வந்தவர்கள் கேள்விகள் கேட்கின்றனர்.)*

அய்யா! எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும்...

இது... மரியாதையான பேச்சு! என்ன உண்மை தெரியணும்?

'பெண்ணாகி ஆணாய் அலியாய்...' என்று மணிவாசகர் என்ன கணக்குல வரிசைப்படுத்துறாரு?

கணக்குன்னா.... அது எனக்கு ஆமணக்கு!

மணிவாசகர்ட்ட போயி இப்பக் கேட்கவும் முடியாது!... ஆனா... இன்றைய அறிவியல் சிந்தனைப்படி அதைப் பார்த்தால் அதுதான் சரி!

இதென்னடா புதுக் குழப்பம்? ஆமா... எட்டாம் நூற்றாண்டுக்கும் இருபத்தியோராம் நூற்றாண்டுக்கும் எப்படி முடிச்சி போடுறீங்க?

முடிச்சி போடலை... முடிச்சி தானா வந்து விழுது... அவ்வளவுதான்!... கருத்தரித்தல் பற்றி நம்ம அறிவியல் என்ன சொல்லுது?

பெண்ணிடமிருப்பது X குரோமோசோம்கள் மட்டுந்தான்!

*(X அடையாளத்தைத் தூக்கிக் கொண்டு வருதல்)*

ஆணிடமிருப்பது XY குரோமோசோம்கள்!

*(XY அடையாளத்தைத் தூக்கிக் கொண்டுவருதல்)*

X உம் X உம் சேர்ந்தால் அது பெண்! X உடன் Y சேர்ந்தால் அது ஆண்!

*(X, Y அடையாளங்களைக் கொண்டு அவற்றை விளக்குதல்)*

இதிலிருந்து என்ன தெரியுது?

பெண்ணிடமிருப்பது X குரோமோசோம்கள் மட்டுந்தான்!... ஆணிடமிருப்பது XY குரோமோசோம்கள்!.... X உம் X உம் சேர்ந்தால் அது பெண்! X உடன் Y சேர்ந்தால் அது ஆண்!

அதாவது, பிறக்கும் ஒவ்வொருவரும் கருவில் உருவாகும்போது பெண்பாலாகத்தான் இருக்கிறோம். The Female is the default design... The female is the default design... The female is the default design...

ஆமா.... இதென்ன தமிங்கிலீஷ்? தமிழில்தான நாம நாடகம் போடுறோம்...

இது தமிங்கிலிஷ் இல்ல... தமிழு... அப்புறம்... இங்கிலிஷூ இது தப்பில்ல...

இது டாக்டர் ஷாலினி சொன்னது!...

எது... இது தப்பில்லைன்னு சொன்னதா?

அண்ணே! நல்லாருப்பீங்க... The female is the default design னு சொன்னது டாக்டர் ஷாலினி!

அப்படின்னா?

இப்படிப் பெண்ணாய் உருவான கருவின் உடம்பில் அந்த ஒற்றை Y குரோமோசோம் வீற்றிருந்தால். அது கரு உருவான ஆறாம் வாரத்தில் டெஸ்டோஸ்டீரோன் என்ற ஹார்மோனை உற்பத்தி செய்கிறது. இந்த டெஸ்டோஸ்டீரோன் என்ற ஹார்மோன் அந்தக் கருவின் உடம்பு முழுக்கப் பரவி, எல்லா செல்களையும் 'ஆண்மைப் படுத்தி' விடுகிறது.



ஆறுவாரம் வரை பெண்பாலாய் இருந்த அந்தச் சிசு... Y குரோமோசோம் வெளிப்படுத்திய டெஸ்டோஸ்டீரோன் ஹார்மோன் உபயத்தால்... இல்லை ஆதிக்கத்தால்... மெல்ல மெல்ல ஆணாய் மாறுகிறது.

பெண்தான் - X தான் - அடிப்படை! பெண்கருதான் ஆணாய் உருமாறுகிறது.

அப்படிப்போடு அருவாளை!... அப்ப... நாமெல்லாருமே பெண்ணா இருந்துதான் ஆணா மாறுனவுங்களா?

அப்படித்தான்னு இப்ப அறிவியல் சொல்லுது!

அதுசரி! 'பெண்ணாகி ஆணாய்' என்பது புரிகிறது. 'அலியாய்' என்பது எப்படி?

Y குரோமோசோம் இப்படி வெளிப்படுத்திய டெஸ்டோஸ்டீரோன் ஹார்மோனை உள்வாங்கிக் கொண்டு செல்களில் மாற்றத்தை ஏற்படுத்த ஒவ்வொரு X செல்லிலும் பல ரிசெப்டார்கள் இருக்கின்றன.

அய்யா!... ரிசெப்டார்கள்னா?...

Y குரோமோசோம்ல உள்ள டெஸ்டோஸ்டீரோன் வெளிப்படுத்திய ஹார்மோனை உள்வாங்கிக் கொண்டு X செல்களின் உள்ளேயும் வெளியேயும் மாற்றத்தை ஏற்படுத்தி அதை மூளை நரம்பு மையத்திற்குக் கொண்டு செல்லுற தந்தியில்லாக் கம்பி அது!...

ஏ அப்பா!... ஒருவேளை. இந்த ரிசெப்டாரில் கோளாறு நேர்ந்தால்?...

நல்லது எதாவது கேட்கத் தோணுதா? கோளாறுதான் மொதல்ல இவம் புத்திக்கு வரும்...

எப்படி இருந்த நான்... இப்ப இப்படி மாறிட்டேன்... அந்தக் கதைதான்!

டெஸ்டோஸ்டீரோன் இல்லாமல் செல்களினால் முழுமையாக 'ஆண்மைப்பட' முடியாது! செல்கள் எல்லாம் default design ஆன பெண் தன்மையிலேயே காரியங்களில் ஈடுபட ஆரம்பித்துவிடும். அதனால, உடல் எல்லாம் ஆண்மை மயம்; மனம் மட்டும் பெண்மை மயம் என்றாகிவிடக்கூடும். இப்பப் புரியுதா?

நல்லாப் புரியுது... இதுக்குக் காரணம் அவுங்களும் இல்லை; அவுங்க பெற்றோர்களும் இல்லேன்னு! பெற்றோர்களின் குரோமோசோம்கள்தான் அதுக்குக் காரணம்!...

மொதல்ல பெத்தவங்க மேல அப்பியிருக்கிற தாழ்வான எண்ணத்தைத் தொவச்சி மனசக் காயப் போட... அவுங்களைக் கேட்கலாமா?

ம்ம்ம்... கேட்கலாம்...

ஆனா... அவுங்கள எப்படிக் கூப்பிடுறது?...

நம்மக் கொள்ளுத் தாத்தா.... 'ஒல்காப் பெரும்புகழ்' தொல்காப்பியர் கூப்பிட்ட தொனியிலேயே கூப்பிடுவோம்!...

அதுவுஞ் சரிதான்... மரபுக்கும் மரியாதை; மனுஷத்துக்கும் மரியாதை!...

அம்மா!... அம்மா!...

என்னையா?.... 'ஒம்போது', 'பொட்ட', 'கீரவட' போன்ற மொழிவழக்குகளில் எங்களை மஞ்சள் நீராட்டி மகிழ்ந்திருந்த நீங்களா 'அம்மா' என்று எங்களை அழைக்கிறீர்கள்!

இப்பத்தான் உங்கள் பிறப்பின் ரகசியம் புரிந்தது... உங்கள் மேல் பரிவு பிறந்தது... நீங்களும்... எங்கள் பக்குவமற்ற புறக்கணிப்பின் மேலுள்ள கோபத்தைத் துடைத்து, எங்கள்மேல் பரிவு கொள்ளுங்கள்.

தொடக்கத்துல பயந்தான் இருந்திச்சி.... இப்ப எனக்குள்ள நடந்த குரோமோசோம் மாற்றம் அதைப் பரிவா மாற்றிட்டுது....

என்ன... குரோமோசோம் மாற்றமா?... இது... குரோமோசோம் மாற்றமில்ல... குரோ இல்ல... காக்கா அது உண்டாக்கின மாற்றம்... அதனோட மோசமான மாற்றம்!

நானென்ன காக்காவா பிடிக்கிறேன்... என்னை அப்படித்தானே கிண்டல் பண்ணுறீங்க!

அய்யய்யோ கிண்டல்லாம் பண்ணலை... ஒங்க மேல உள்ள பரிவுல பேசுறோம்!...



ங்ங்ங்ங்ஙேஏஏ...

சரி... சரி... அழாதே!... நம்ம பஞ்சாயத்தைப் பெறவு வச்சிக்கலாம்... இப்ப எதுக்கு வந்தோமோ அந்த வேலையை மட்டும் பாப்போம்!...

வந்த வேலையைத்தானே பாத்துக்கிட்டிருக்கோம்....

இதுவொரு பெரிய தலைவலி! இப்படியே பண்ணிக்கிட்டிருந்தா... வலி அறுப்பு நாடகத்தை ஒங்கக் கழுத்த அறுத்தே முடிச்சிருவேன்... ஆமா!.... அம்மா!.... உங்கள் நெஞ்சை அடைத்துக் கொண்டிருக்கும் தீராத வலி என்ன?

தீராத வலி... தீராத வலி... நெஞ்சில் மாறாத வடுவாய் இன்னமும் பதிந்திருப்பது.... அர்த்தநாரியாய் ஆணுக்குள் பெண்ணாய் நாங்கள் அலைக்கழிந்த அந்த வயதில், எங்கள் பெற்றோர் எங்களை ஏறெடுத்தும் பாராததுதான்! விளக்குமாறெடுத்துத் துரத்தியதுதான்!... பிறப்பே பகையாச்சு... இருப்பே நெருப்பாச்சு!

எப்படி?

அன்றுதான் 'மண்டலமிட்டு எனக்குள் படுத்திருந்த' பெண்மை மெல்லத் தலைதூக்கிப் படங் காட்டத் தொடங்கியது... குரோமோசோம் மாற்றம் உள்ளிருந்து குதியாட்டம் போட்டது... இயற்கை எனக்குளளே மறைந்திருந்து என்னையே சாய்க்க ஏவி விடும் பாணம் எனக்கு அன்று வியப்பைத் தந்தது... எனக்குள்ளே மருகி நின்ற பெண்மையை மறைக்கப் பார்த்தேன்... பலநாள் திருடனாய் ஒருநாள் அகப்பட்டேன். அப்பா அம்மா அன்று வீட்டிலில்லை. கதவைத் தாளிட்டேன்... என் பெண்மையை விரித்துப் பார்க்கப் போதிய அவகாசம் அன்று கிடைத்ததாய் உணர்ந்தேன். கண்ணாடி என் கவலைக்கு மருந்தானது. அலமாரியில் இருந்த அம்மா புடவையோ பாசத்தால் வாரி என்னைக் கட்டிக் கொண்டது. என்னுலகம் உருவானது. நான்தான் அதற்கு ராணி!... அழகு ராணி!... முடிசூட்டிக் கொண்ட மெத்தனத்தில் கரைந்து திரிந்தேன். வாழ்வின் அற்புதக் கணத்தில் மிதந்தேன்.... வானத்திற்கும் பூமிக்குமாய்ப் பறந்தேன்... என்னையே நான் மறந்தேன்... அப்பொழுதுதான் அப்பா

அம்மா கதவைத் தட்டும் சத்தம் இடிபோல என் தலையில் இறங்கியது. என் உலகத்தை அந்த ஒரு நொடிக்குள் பக்குவமாய்ச் சுருட்டி வைக்கத் தெரியாமல் மாட்டிக் கொண்டேன்.

*(அடி... உதை... வீட்டை விட்டுத் துரத்தப்படல்)*

வீடு அரவணைக்காததால் படிதாண்டிய சோகம் நிகழ்ந்தது. வீட்டிலிருக்கிற உங்களுக்கு அதன் வலி தெரிந்திருக்கிற நியாயமில்லை... தொலைத்ததைத் தேட வெளிச்சத்தைத் தேடினோம். வெளிச்சமாய் அமைந்தது எங்கள் 'ஜமாத்!'

*(சோக இசை. அதைத் தொடர்ந்து மெல்லிய பாடல், அதனூடே 'ஜமாத்' நிகழ்வுகள்)*

ஒத்தையாக வாழ முடியுமா? - நமக்கு
உற்றதுணை ஒன்று வேண்டாமா?
ஒத்தையிலே வாழ முடியுமா? - நமக்கு
உற்றதுணை ஒன்று வேண்டாமா?
பெத்தவர்கள் ஆறுதல் ஆனால் - இங்கு
பிரிந்து வாழும் தேவை இல்லையே!

எல்லாவற்றிற்கும் மறுபக்கம் உண்டு. ஒரு பக்கம் இது! இது உங்கள் பக்கம். இன்னொரு பக்கம் உங்கள் பெற்றோர் பக்கம். அவர்களின் கதையைக் கேட்க எனக்கு அனுமதியுண்டா?

கேளுங்கள். எங்களிடம் சொல்லத் தவிர்த்த கதையை உங்களிடம் இறக்கி வைக்கக்கூடும்!

அய்யா! உங்கள் சோகம் ஆறுதலுக்குள் வசப்படாதது. பகிர்ந்து கொள்ளும் பக்குவமிருப்பின் உங்கள் கதையின் கதையை எங்கள் காதுகளில் விதையுங்கள்.

எல்லாம் நிராசையாய்ப் போச்சுதே!... ஒரு கை ஓசை எப்படிக் கூடும்?... தரிசாய்ப் போச்சுதே எங்கள் பணப்பயிர்!... எங்கள் ஆசைக் கனவில் ஏனிந்தப் பேரிடி?... ஊரார் முகத்தில் விழிப்பதெப்படி?... அவமானத்தில் நொறுங்கிப் போனோம்... குருதி அழுத்தம் கொடுப்பினையானது. எங்கள் குருதித் துடிப்பில் உதித்த குழவி



வெடிகுண்டாய் மாறி எங்கள் உதிரத்தைத் தகர்க்குமென்று யாருக்குத் தெரியும்? அதிர்ச்சித் தாக்குதலின் வலி அனுபவித்தால் மட்டுமே புரியும்?

கொடுமை! ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள 'தான்' என்ற முனைப்பு மறுத்ததால், வாழும் சமூகம் கண்டு மருண்டதால், இரண்டு பக்கமும் ஆறாத நெருப்பாய் நெஞ்சில் தீராத வலி. இன்னும் கொஞ்சநேரம் இந்தக் கதைக்குச் சாட்சியாய் நின்றால் என் நெஞ்சும் வலியால் நிறையும்!... (அவையோர் பக்கம் திரும்பி) அய்யா! நீங்க இதப்பத்தி என்ன நெனைக்கிறீங்க!... (அவையோர் கருத்து)... அம்மா! நீங்க.... (அவையோர் கருத்து)...

இதெப்போயி அங்க கேட்குறீங்களே!... நாங்க சொல்றோம்... நிராசையின் உருவம் அவர்கள்!

நிராசையின் உருவமா அவர்கள்?.... அப்படிப் பார்த்தா நாமளும் இவுங்களும் கூடத்தான்.

நமக்குத்தான் நாம ஆசைப்பட்ட மாதிரியே உருவமும் மனசும் ஒத்துப் போகுதே!

ஒவ்வொருத்தர்க்குள்ளேயும் ஒரு அவுன்ஸ் மல... வெளியேறாமத் தங்கிக் கெடக்கிறபோது நிறைவேறின ஆசைங்கறது யாருக்குத்தான் அமையுது?

அப்படிப் போடு அணுகுண்ட...

நிராசையைக் கணக்கு வச்சி ஒருவகையாப் பார்த்தா ஒருவகையிலே நாம எல்லாருமே அரவானிங்கதான்!

*(சிரிப்பும் கேலியுமாகச் சூழல் அமைகிறது.)*

இப்படிக் கூடிச் சிரிச்சி எவ்வளவு காலமாகுது?... எங்க... வேத்துக் கிரகத்து ஆளாப் பிரிச்சிப் பார்க்காம உங்கள்ல ஒருத்தி... எங்களப் பார்க்குறது மனசுக்கு நேர்த்தியா இருக்குது.

ரொம்ப மகிழ்ச்சி. உங்கள்ட்ட பேசப் பேசத்தான் உங்க... பத்திய பயமும் வெறுப்பும் எங்களுக்கு நீங்குது. தாயாப் புள்ள... ஒங்களப் பார்க்கத் தோணுது. தீராத வலி ஒன்... சொன்னீங்க...தீர்ந்துபோன வலி ஏதும் ஒங்களுக்கு இருக்குதா...

தீர்ந்துபோன வலி...ம்ம்ம்.... 'திரு'வை அறுத்தெறிந்து எங்களைத் திருத்தி அமைத்ததில் தீர்ந்துபோன வலி! புரியவில்லையே!

எங்களை மனம் விட்டுச் சிரிக்க வைத்த உங்கள் மனம் நோகாமல் எங்கள் மனசைத் திறக்கிறோம்.

விடலைப் பருவம்!... அடங்க மறுக்கும் காளையின் பெருமூச்சாய்க் காமம் சீறிக் கிளம்பும் பருவம்! எங்கள் உடலின் தோலுரித்து, உள்ளே பொதிந்து வைத்த ரகசியத்தை அவசரமாய் அம்பலப்படுத்தத் துடிக்கும் பருவம்! எங்கள் ஆணுடலிலிருந்து பெண்மை அத்துமீறிப் போக்கிடம் தேடும் புது உலகில் நாங்கள் புதைந்துபோன நேரம்! ஆணுடல் சிறை என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தோம்! சிறைக் கம்பிகளை உடைத்தெறிந்து சுதந்திரப் பெண்மையாய்ப் பறந்து செல்ல போர்த்திய போர்வையை உதறியெறிவது அவசியம் என்பதாய் உடம்பும் மனசும் பாடு பேசின! இயற்கையின் விந்தையில் பிரசவவலி மட்டும்தான் உயிரின் எல்லையைத் தொட்டு உயிர்களைத் திரும்பவும் தருகிறது. செத்துப் பிழைக்கும் இன்பவலி! இதற்கான கொடுப்பினை ஆணுக்கில்லை! இந்த வலியின் அழகை எதிர்கொள்ளும் வாயில்கள் காமமும் காதலும்! பிரசவம் எங்களுக்குப் பாக்கியமில்லை. ஆனால் மனம் தேடும் கூட்டை வடிவமைக்க எந்த வலியையும் விலையாய்க் கொடுக்க எங்கள் சித்தம் தயாரானது. ஆணின் அதிகார உறுமல்களை அப்புறப்படுத்த கைகள் கத்தியை ஏந்தின களபலிக்கு! அறுத்தெடுத்த ஆண்மைக் கபாலத்தைத் துடிக்கத் துடிக்கக் கையில் தூக்கி வைத்து ஆணுடன் சேர்ந்து ஆனந்தக் கூத்தாடத் துடிக்கும் மனசின்வழி நாங்கள் நடக்கிறோம்! இது இன்னுமொரு செத்துப் பிழைக்கும் இன்பவலி!

தீர்ந்துபோன உங்கள் வலி எங்களை வலுவிழக்கச் செய்கிறது. வாய்பேச இயலா மௌனியாகிறோம். *(அவையோரிடம்)* அய்யா! நீங்க இதப்பத்தி என்ன நினைக்கிறீங்க?...... *(அவையோர் கருத்து)*.... அம்மா! நீங்க........ *(அவையோர் கருத்து)*...

அதிகாரத்தை அப்புறப்படுத்தி அந்த இடத்தை அன்பால் வடிவமைக்கிற கலை வித்தகர் நீங்கள்!



என்ன... கலையை வித்தவுக நாங்களா?

அய்யய்யோ... கலையை இல்லீங்க...சிலையை..

என்ன... சிலையையா?

சே!... என்ன இது நாக்கொளறுது!... சிலையுமில் லேன்னா.... ம்ம்ம்... சீலையை?

என்ன... சீலையை வித்தவுகளா?

சீலையை வித்தவுக இல்லை..... சீலையைச் சுத்துனவுக!.... வேட்டிக்குப் பதிலா சீலையைச் சுத்தினவுக......இப்ப சரியா?

அரவானிங்கங்கிறதைத்தானே இப்படிச் சுத்தி வளச்சிச் சொல்றீங்க.....அதானே!

சுத்தி வளைச்சு இல்ல....நேராவே சொல்றேன்... இவுங்க மட்டுமா அரவானி?..... எல்லாருந்தான் அரவானி!

எல்லாரும்னா?

மனசால நிறைவேறாத ஏக்கங்களை மடியிலே சுமந்து திரியிற அத்தனைப் பேருமே ஒருவகையிலே பார்த்தா அரவானிங்கதான்!

*(சிரிப்பும் கேலியுமாகச் சூழல் அமைகிறது).*

இப்படிச் சிரிச்சி எவ்வளவு காலமாகுது!... ஆறாத புண்ணாயிருந்த தீராத வலியும்... தீர்ந்துபோன வலியுங்கூட...இலவம் பஞ்சாய்க் 'காற்றின் தீராத பக்கங்களில்' தன் வாழ்க்கையை எழுதிச் செல்கின்றன! பகிர்ந்து கொள்ளுகையில் பாரம் குறைகிறது. வலி அறுப்பில் வலி தொலைகிறது!

கவிதைகூட உங்களுக்குக் கைவருமா!

கால ஓட்டத்தில் கரைந்து போகாத 'இலக்கணம் மீறி கவிதை' நாங்கள்! புதுமைக் கவிதை நாங்கள்!

தீராத வலி ஒன்றைச் சொன்னீர்கள்! தீர்ந்துபோன வ ஒன்றையும் சொன்னீர்கள்!

இனி தீர்க்கப்பட வேண்டிய வலி என்று ஏதும் இருந் சொல்லுங்கள்!

வலி அறுத்து வலி அகற்றும் வைத்தியராக நீங்கள் இருப்பதால் எங்களுக்கு வழி கிடைக்கும் என்றே நம்புகிறேன்,

ஏனிந்தப் பீடிகை?... தீர்க்கப்படவேண்டிய வலியைச் சொல்லுங்கள் முதலில்!.... களையும் வழியை இவர்களே (அவையோரைக் காட்டி) செய்வார்கள்!

மத்தளத்திற்கு இரண்டு பக்கம் மட்டுந்தான் அடி! மனகள்ள எங்களுக்கோ உயிரணுவின் ஒவ்வொரு செல்லுக்குள்ளும் மாறி மாறி இடி!

அன்று நடந்தது இதுதான்...

'ஏய் ஒம்போது'!

...குடி போதையில் ஒரு குடிமகன்... திடுக்கிட்டுத் திரும்பினேன், எதிர்த் திசையில் காவலர் ஒருவர் பாராமுகமாய் அவரும் பார்த்துக் கொண்டேயிருந்தார். 'ஒம்போது' என்பது உங்கள் அகராதியில், அவமானத்தைத் தழுவிய ஒரு அவச்சொல்தானே! ஏன் ஒம்போது?... வேண்டுதலுக்காய் நீங்கள் சுற்ற, உங்களுக்கு 'ஒம்போது' நவக்கிரகங்கள் வேண்டும்... புண்ணியத்தை அறுவடை செய்ய உங்களுக்கு 'நவ'தானியங்கள் வேண்டும்... அணிந்து அழகு பார்க்க 'நவ' ரத்தினங்கள் வேண்டும்... சிணுங்குகிற செல்பேசி எண்ணெல்லாம் 'ஒம்போதி'ல் தொடங்க வேண்டும்... ஆனால் 'ஒம்போது' எனும் நாமத்தைச் சாத்தி ஏன் எங்களை மட்டும் அவமானத்தில் அமிழ்த்திப் பார்க்க வேண்டும்?...புரியவில்லை...

'ஏய்! 'ஒம்போது'!

....கோபம், மூக்கு நுனி வரையிலும் முறுக்கி வந்தது... வேகமாய் வந்தென் சேலையை இழுத்தான்.......திமிறினேன்... பாஞ்சாலியாய்க் காவலரே கதியென்று கதறினேன்.....காவலரின் காதுகள் இரும்பாயிருந்திருக்க வேண்டும்! அல்லது இந்தக் காட்சியின் ஓலம் அவருக்குக் கரும்பாய் ஒலித்திருக்க வேண்டும்!......குடிமகனுக்கு அது கூடுதல் தெம்பாய்ப் போனது... சேலைக்கு வேலையின்றிப் போனது... ஆணுடலுக்குள் பெட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடக்கும் பெண்மையின் வரைபடத்தை ஊருக்கே விருந்தாக்கத் துடித்தான்,..... வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது ஊர். காவலரிடம் ஓடினேன்.., ஒட்டுத் துணியாய் என்னை அலட்சியப்படுத்தினார்...



கத்தினேன்... ஒரு கணம்... ஒரே கணம்! ஒட்டுத் துணியை உதறி எறிந்தேன்... இந்தச் சமூகத்தின் மேலான என் ஆத்திரத்தை அம்பலப்படுத்த என் கைக்கு அப்போது கிடைத்த ஒரே ஆயுதம் என் நிர்வாணம்!... கதறினேன்,... என் நிர்வாணம் அவர் முகத்தில் காறலாய்த் தெரித்திருக்க வேண்டும்! நேரில் சாதிக்க முடியாததை என் நிர்வாணத்தால் சாதித்தேன்... என்னை அவமானப்படுத்தும் போது அமுக்கமாயிருந்த சமூகம். என் நிர்வாணத்தால் அவர்களை அவமானப்படுத்தும்போது அதிர்ந்து போனது.... காவலர் என்னை அடிக்க வந்தார்.. என் நிர்வாணத்திலிருந்து நெருப்புப் பொறி பறந்தது....

.... அவமானத்தில் பொசுங்கிப்போன காவலர் அந்தக் குடிமகனிடம் தன் கோபத்தைத் திருப்பினார்...

ஏய்! ஏண்டா உசுரை வாங்குற? போடா... போடா...

ஏன்? ஏன்? ஏன் எங்களுக்கு மட்டும் இது நிகழ்கிறது?....

உங்கள் நடவடிக்கைகள் கௌரவமாயிருந்தால் இப்படி எல்லாம் நிகழுமா?

மலத்தைப்போல ஒதுங்கிக் கிடக்கிற எங்களின் உணர்ச்சிகளையும் புரிந்து கொள்ளுங்கள்....

எங்களை முள் படுக்கையில் தள்ளி முறுவலிக்கிற உங்களின் சாமர்த்தியம் உங்கள் பேச்சில் நன்கு தெரிகிறது...

பெற்றோர்களால் புறக்கணிக்கப்பட்டு, செல்லும் திசை தெரியாது. வானம் பார்த்த பூமியாய் ஏங்கித் தவித்த சோகத்தின் வலியை எப்பொழுதாவது நீங்கள் உணர்ந்ததுண்டா?

பருவ வயதில் பாலியல் உறுப்பை வெட்டி எறிகிற வலியின் அடர்த்தியை வார்த்தைகளாக்க உங்களால் முடியுமா?... உங்களால் முடியவே முடியாது...

பட்டாம் பூச்சியாய்ப் பறந்து திரிய வேண்டிய பருவ வயதில் சிகப்புச் சந்தையில் விலை பேசப்பட்டு இறக்கைகள் கிழித்தெறியப் பட்ட சோகத்தின் வலியை நாங்கள் சொன்னாலும், அத ஆதியோடு அந்தம் அறிய உங்களுக்கு வாய்ப்பேயில்லை...

வலி... வலி... வலியை மட்டுந்தான் எங்கள் வாழ்க்கையின் சொத்தாகச் சேர்த்திருக்கிறோம். நீறு பூத்த சோகத்தின் வலியை மறைக்கப் பார்க்கிற தந்திரமாய்த்தான் நாங்களே கூத்தாண்டவர் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்கிறோம்.

இந்த நிலையில் எப்படித்தான் நாங்கள் கௌரவமாய் நடந்து கொள்வது?

மன்னிக்க வேண்டும்... உங்களைப் புண்படுத்தியிருந்தால் என்னை மன்னிக்க வேண்டும்!.... உங்கள் கதை புதுமையாய் இருந்தாலும் சோகத்தில் தடம் பதித்திருக்கிறது. கதை சொன்னதால், உங்கள் வலியை எங்கள் தலையில் சுமக்க வைத்து விட்டீர்கள்! கதை கேட்டதால், எங்கள் தலைச்சுமையும் மனச்சுமையும் முதுகுத்தண்டை முறித்து விடுகிற முள் முடிச்சுகளாய்த் தங்கிப் போயுள்ளன. உங்கள் வலி எங்கள் வலியாய் இடம் பெயர்ந்துள்ளது. அறுத்தெடுத்த வலியையும் அழுத்தி நிற்கும் வலியையும் இறக்கி வைக்கிற தாங்கிகளாய் ஆகிப் போனோம் நாங்கள்! இரண்டு வலித் தடங்களும் இணைகிற புள்ளியில் அன்பு மட்டுந்தான் அடைக்கலமாகும்!... வாருங்கள்... 'வலி அறுப்பு'க்கு நாள் குறிப்போம்! வலியில் வசந்தம் தேடும் வனக் குருவிகளே! கூட்டிற்குச் செல்லுங்கள்! கூடு சிறையெனில் புதுக்குவோம் நம் கூட்டை!... எங்களுக்கிருக்கும் எல்லா உரிமையும் உங்களுக்கும் உண்டு! நீங்கள் எங்கள் செதில்களிலிருந்து உங்களின் பாட்டையைத் தேர்வு செய்தீர்கள்! நீங்கள் எங்கள் சகோதரிகள்!... உங்களுக்கு எங்களின் வேண்டுதல்கள்!... மானமும் அறிவும் மட்டுமே மனிதர்க்கு அழகு... எந்தச் சூழலிலும் மானத்தைப் பங்குபோட இடங்கொடுக்காதீர்கள்! அறிவால் மட்டுமே உங்களை என்றும் அழகுபடுத்திக் கொள்ளுங்கள்!... அடுத்த தலைமுறைக்கு நீங்கள் விட்டுச் செல்லும் ஆக்கினைகளாய் அவை இருக்கட்டும்... எல்லா உரிமைகளும்... உங்களைத் தேடிவர உழையுங்கள். மாறும் என்பதே மாறாதது... ஆனால்... தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்!... இனி நமக்குள் பேதமில்லையென்று கூவி மகிழுங்கள்... வலி அறுப்பின் குலவை ஒலி உங்கள் இமை இடுக்குகளின் வழியே ஆனந்த நீராய்ப் பெருகி ஓடட்டும்! வாருங்கள்.... புதிய பூபாளம் இசைக்க உங்கள் கைகளும் எங்கள் கைகளும் ஒன்று சேரட்டும்.... மனிதத்தை உயர்த்த உங்கள் கைகளும் எங்கள் கைகளோடு உயர்ந்து நிற்கட்டும்... ஊர் கூடித் தேர் இழுக்க



பெயர் கூவி அழையுங்கள்!... வாருங்கள்... வாருங்கள்... வாழ்த்திசைப்போம்....

வசந்தத்தின் இடிமுழக்கம் இது!
வாழ்த்திசைக்கும் பெருமுழக்கம் இது!
மனிதர்தம்மை இழிவுசெய்யும் மடமையைக்
கொளுத்துவோம்!
மனசிலிருக்கும் வெறுமையை முழுமையாக
விரட்டுவோம்!
பிறப்பொக்கும் என்றுசொன்ன பெருமகனைப் போற்றுவோம்!
பேதம் ஒழிந்த சமுதாயம் ஆக்குவதற்கே முயலுவோம்!
திருவாளர் திருமதி திருநங்கை கூடுவோம்!
திசைதேடும் இளமைக்குப் புதுவழியைக் காட்டுவோம்!
புதுவழியைக் காட்டுவோம்! நம் அறிவைத் தீட்டுவோம்!
நல்வழியை நாட்டுவோம்!... நம் மனசைக் கூட்டுவோம்!
நம் மனசைக் கூட்டுவோம்!

*(அனைவரும் ஒன்றுசேர்ந்து பாடுகின்றனர்.)*

★